**ஷெய்குனா ஸூபி ஹழ்ரத் காஹிரி கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஸ் அவர்கள் பாடியது**

*அஸ்ஸலாமு அலைக்கு முஸ்ஸலாமு அலைக்குமு*

*அஸ்ஸலாமு அலைக்கு முஸ்ஸலாமு அலைக்குமு*

மதி பிறந்ததோ - மாநிதி திறந்ததோ

என் கதி பிறந்ததோ - வருக அஸ்ஸலாமு அலைக்க (அஸ்ஸ...)

ஆதி தூதரே - அருளான வேதரே

என் ஆசை நாதரே - வருக அஸ்ஸலாமு அலைக்க (அஸ்ஸ...)

அக மகிழ்ந்ததே - ஒளிவால் நிறைந்ததே

என் உளம் குளிர்ந்ததே - வருக அஸ்ஸலாமு அலைக்க (அஸ்ஸ...)

கஸ்தூரி வாசமே – தினம் கமழ்ந்து வீசுமே

பல காத தூரமே வருக – அஸ்ஸலாமு அலைக்க (அஸ்ஸ...)

மதியை பழித்தோரே – மாமறைகள் புகழ்ந்தோரே

என் மனதை கவர்ந்தோரே – வருக அஸ்ஸலாமு அலைக்க (அஸ்ஸ...)

அய்னில்லா அரபியே - மீமில்லா அஹ்மதே

அர்ஷலாவும் சிரசுடைய அண்ணலே சலாம் (அஸ்ஸ...)

பளீர் முகத்தையே - நும் பவள இதழையே

பார்த்தவர் மிகவும் - பாக்கிய சாலியாவரே (அஸ்ஸ...)

காதலானேனே - உமைக் காண வந்தேனே

நுங்கள் கதத்திலெப்ப வீழ்வதென்று கதறியழுதேனே (அஸ்ஸ...)

காலைப் பிடித்தேனே – என் கண்ணில் வைத்தேனே

உங்கள் கருணைக் கரத்தாலென்னை காத்து இரட்சித்தருள்வீரே (அஸ்ஸ...)

திங்களா முகம் - திவ்விய மங்களா குணம்

தமியேனென்னை தாபரித்து தாளை தாருமே (அஸ்ஸ...)

பாவம் போகவே - பரிதாபம் நீங்கவே

பார் புகழும் உமது பொற்பாதம் தாருமே (அஸ்ஸ...)

www.sufimanzil.org